SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

# FIRST EXAMINATION IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2011/2012

HELD IN APRIL / MAY 2013

## SOC 1.11 – BASIC CONCEPT IN SOCIOLOGY

எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடையளிக்குக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

ஒன்றில்

01. சமூகவியலின் தோற்றத்திற்கு பின்புலங்களாய் அமைந்ததென அயன் றொபெட்சன் (Ian Robertson) முன்வைக்கும் காரணங்களை தெளிவுபடுத்துவதோடு, சமூகவியல் எனும் கற்கையை ஏன் படிக்க வேண்டும் எனவும் விளக்குக.

அல்லது

சமூகவியலின் உண்மையான தந்தையாக (Real father of Sociology) இப்னு கல்தூன் (Ibn Khaldun) எனும் முஸ்லிம் புத்திஜீவியே கொள்ளப்பட வேண்டும் எனும் தற்கால ஆய்வாளர்களின் வாதத்தை நீர் ஏற்கின்றீரா? உமது வாதத்தை நியாயப்படுத்துக.

(20 புள்ளிகள்)

02. அ) சமூகக் குழு என்றால் என்னவென்று சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ) முதல் நிலைக் குழு, இரண்டாம் நிலைக் குழு ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை ஒரு அட்டவணையைப் பயன்படுத்தி விளக்குக.

(15 புள்ளிகள்)

03. அ) சமூகக் கட்டுப்பாடு என்பதன் மூலம் யாது புரிந்துகொள்கின்றீர்?

(05 புள்ளிகள்)

ஆ) "சமயமானது, நவீன சமூகத்தை விட பாரம்பரிய சமூங்களிலேயே ஒரு வினைத்திறன் மிக்க சமூக கட்டுப்பாட்டு கருவியாக தொழிற்படுகின்றது" உமது விடையை விமர்சன ரீதியாக முன்வைக்குக.

(15 புள்ளிகள்)

04. அ) சமூகமயமாக்கலின் வகைகளை (Types of Socialization) விளக்குக.

(08 புள்ளிகள்)

ஆ) "நவீன சமூக அமைப்பிலே ஊடகங்கள் காத்திரமான சமூகமயமாக்கல் முகவராக தொழிற்படுகின்றன" இக்கூற்றை ஏற்கின்றீரா? உமது விடையை நியாயப்படுத்துக.

(12 புள்ளிகள்)

05. "பொருளாதாரம் மட்டுமல்ல, மதமும் மதக் கருத்துக்களும்கூட சமூக மாற்றத்தை தூண்டும் கருவியாக தொழிற்படுகின்றன" இக்கூற்றை விமர்சன ரீதியாக விளக்குக.

(20 புள்ளிகள்)

06. அ) சமூக நிறுவனம் என்பதால் யாது புரிந்துகொள்கின்றீர்?

(05 புள்ளிகள்)

ஆ) சமூக நிறுவனங்களின் தொழிற்பாட்டினாலேயே (Functions of social institutions) சமூகத்தின் பல்வேறுபட்ட தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றன" இக்கூற்றை நீர் கற்றறிந்த ஏதாவதொரு சமூக நிறுவனத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

07. நவீன இலங்கையில் சமூகங்களிடையே பரவலாக அவதானிக்கக்கூடிய சமூக மாற்றங்களை ஆராய்க.

(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் இரண்டுக்கு (02) சிறுகுறிப்பு வரைக

அ) இலங்கை அரசாங்கமும் மதமும்

ஆ) சமூக கட்டுப்பாட்டின் வகைகள்

இ) தமிழ் சினிமாவில் முஸ்லிம்கள் பற்றிய சித்தரிப்பு

ஈ) சமூக அடுக்கமைவு (Social Stratification)

(10x2=20 புள்ளிகள்)